சுருக்கம்

உயர்கல்வித்துறை – ஊனமுற்றோர் நலம் – அரசு மற்றும் அரசு உதவி பெறும் பொறியியல் கல்லூரிகள் மற்றும் உயர்கல்வித்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களில் பயிலும் ஊனமுற்றோருக்கு கல்விக் கட்டணம் செலுத்துவதிலிருந்து முழு விலக்களித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

உயர்கல்வி (கே2)துறை

அரசாணை (நிலை) எண்.429

நாள்.16.10.2008
திருவள்ளுவர் ஆண்டு 2039
புரட்டாசி–30

படிக்கப்பட்டது:–

1. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 19.8.2008 அன்று ஊனமுற்றோருக்கு அளிக்கப்பட்ட புதிய சலுகைகள் பற்றிய செய்திக் குறிப்பு
2. அரசாணை (நிலை) எண். 389 உயர்கல்வி (ஜி1)துறை நாள். 4.12.2007
3. அரசாணை (நிலை) எண்.259 உயர்கல்வி (பி2) துறை நாள். 26.6.2008
4. அரசாணை (நிலை) எண். 135, சமூகநலம் மற்றும் சத்துணவுத்திட்ட (ச.ந.4)துறை நாள். 20.9.08
5. முதன்மைச் செயலாளர் / ஊனமுற்றோருக்கான மாநில ஆணையரின் கடித எண். 8239/ஊ.ம.3/2008 நாள். 21.8.2008.

---

ஆணை:–

தமிழ்நாடு உடல் ஊனமுற்றோர் சங்கங்களின் கூட்டமைப்பின் நிர்வாகிகள் முதலமைச்சர் அவர்களை தலைமைச் செயலகத்தில் 19.8.2008 அன்று சந்தித்து தங்களது கோரிக்கைகளை அளித்தார்கள். அப்போது ஊனமுற்றோர் சங்கங்களின் கூட்டமைப்பின் கோரிக்கைகளை கனிவுடன் பரிசீலித்து பெரும்பாலான கோரிக்கைகளை ஏற்று உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அரசாணைகள் வெளியிடப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அவ்வறிவிப்புகளில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் உயர்கல்வி நிலையங்கள் மற்றும் தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகத்தில் பயிலும் ஊனமுற்றோருக்கு கல்விக் கட்டணம் செலுத்துவதிலிருந்து முழு விலக்கு அளிக்கப்படும் என்பதும் ஒன்றாகும்.

2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினைத் தொடர்ந்து, அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பட்டப்படிப்பு பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் இலவச கல்வி அளிக்கும் திட்டத்தினை அமுல்படுத்தி பார்வை 2–ல் கண்ட அரசாணையிலும், அரசு பல்தொழில் நுட்பக் கல்லூரிகள் மற்றும் சிறப்புப் பயிலகங்களில் (Government Polytechnic Colleges and Special Institutions) பயிலும் மாணவர்களுக்கு கல்விக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களித்து பார்வை 3–ல் கண்ட அரசாணையிலும், பின்னர் அரசு மற்றும் அரசு உதவி பெறும் உயர் கல்வி நிலையங்களான மருத்துவக் கல்லூரிகள் மற்றும் வேளாண்மை கல்லூரிகளில் பயிலும் ஊனமுற்றோருக்கு கல்விக் கட்டணம் செலுத்துவதிலிருந்து முழு விலக்களித்து பார்வை 4–ல் கண்ட அரசாணையிலும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

//2//

3. மேற்கண்ட நிலையில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பொறியியல் கல்லூரிகள் மற்றும் உயர்கல்வித்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களில் பயிலும் ஊனமுற்றோருக்கு கல்விக் கட்டணம் செலுத்துவதிலிருந்து முழு விலக்களித்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.கணேசன்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
முதன்மைச் செயலாளர் / ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர், சென்னை–6
செயலாளர், சமூக நலத்துறை, சென்னை–9.
தொழில் நுட்பக் கல்வி ஆணையர், சென்னை–25.
கல்லூரிக் கல்வி இயக்குநர்,சென்னை–6.
அனைத்துப் பல்கலைக்கழகப் பதிவாளர்கள் – உயர்கல்வித்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளவை.
மாநிலக்கணக்காயர், சென்னை 9/18/35 .
மாநிலக்கணக்காயர், சென்னை 9/18/35. (பெயரில்)
சம்பளக்கணக்குஅலுவலர், சென்னை–35.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ,
அனைத்து மறு வாழ்வு அலுவலர்கள் (ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் மூலமாக)
செயலாளர், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை ,சென்னை–9
செயலாளர், நிதித்துறை, சென்னை–9.
உறுப்பினர்–செயலர் தமிழ்நாடு ஆசிரியர் தேர்வுவாரியம், சென்னை–6.
உயர்கல்வித்துறையின் அனைத்து பிரிவுகள்.

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.